OPEN ACCESS

Manuscript ID:
TAM-070420236250

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.01.2023

Accepted: 05.03.2023

Published: 01.04.2023

Citation:
Ganeson, Navin G. "Malaysian Poet Sima. Ilango's Traditional Poems: A Study." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 75–82.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6250

*Corresponding Author:
navingganeson@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Malaysian Poet Sima. Ilango's Traditional Poems: A Study

**Navin G Ganeson**
*Undergraduate Student (Degree)*
*Sultan Idris Education University, Tanjung Malim, Malaysia*
*https://orcid.org/0000-0003-2683-0355*

**Abstract**
Traditional poetry literature emerged in Malaysia and continues to this day with many developments and glories. The development of Malaysia Tamil poetry, traditional poetry, began in 1863 to the present day and has gone through many periods. Poet Sima. Ilangois a senior poet in Malaysian poetry. Poet Ilango has been selected for this study. The purpose of this article is to explore the poetic elements in his works of traditional poetry. In Ilango's traditional poems, theme, concepts, poetic element, impact, and lesson of the poem have been found and explained.

**Key Words:** Malaysia, Poet Sima. Ilango, Traditional Poem, Tamil Literature, Elements of poetry

**References**

1. Saravanan, S. 2008. *Silapthikkaram*. Chennai: Santhiya Pathipagam.

# மலேசியக் கவிஞர் சிமா. இளங்கோவின் மரபுக் கவிதைகள்: ஓர் ஆய்வு

**நவீன் கணேசன்**
இளங்கலைப் பட்ட மாணவர்
சுலுத்தான் இதுரிசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா

***ஆய்வுச் சுருக்கம்***
*மலேசிய மண்ணில் மரபு கவிதை இலக்கியம் தோன்றிப் பல வளர்ச்சிகளையும் பெருமைகளையும் கொண்டு இன்றளவும் திகழ்கின்றது. மலேசியத் தமிழ்க்கவிதையான, மரபுகவிதை வளர்ச்சி 1863ஆம் ஆண்டுத் தொடங்கி இன்றைய நாள் வரை பல காலக்கட்டங்களைக் கடந்துவந்து வளர்ந்துள்ளது. மலேசியக் கவிதைத் துறையில் மூத்த கவிஞராக விளங்கும் கவிஞர் சிமா. இளங்கோ. இவருடைய படைப்புகளில் மரபு கவிதைகளில் கவிதைக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கவிக்கோ சிமா. இளங்கோ மரபுக் கவிதைகளில் கவிதைக்கான பாடுபொருள், மையக்கரு, கருத்துகள், கவிதை நயம், தாக்கம், படிப்பினை ஆகியவை கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.*

***கருச்சொற்கள்:*** *மலேசியா, கவிஞர் சிமா. இளங்கோ, மரபுக் கவிதை, தமிழ் இலக்கியம், கவிதைக் கூறுகள்*

## முன்னுரை

மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முதலாவது தோன்றிய இலக்கியம் மரபுக் கவிதையாகும். மலேசியாவில் இயற்றப்பட்ட முந்தைய கவிதை நூலாகக் கருதப்படும் நூல், 1863இல் முத்துக்கருப்பன் செட்டியாரால் இயற்றப்பட்ட "தண்ணீர்மலை வடிவேலர் பேரில் ஆசிரிய விருத்தம்" என்பதாகும். மலேசியாவில் இதுவரை ஏறக்குறைய 500 மரபுக் கவிதைத் தொகுப்புகள் வெளியாகியுள்ளன (சாமிக்கண்ணு ஜெபமணி, 2020).

அவ்வகையில், மலேசியக் கவிதைத் துறையில் மூத்த கவிஞராக விளங்கும் கவிஞர் சிமா. இளங்கோ. மலேசிய எழுத்துலகில் வலம் வந்திருக்கிறார். இவரின் எழுத்துத் தொடக்கம், 1958இல் தொடங்கியுள்ளது. இவருக்கு "கவிக்கோ" என்ற அடைமொழியும் உள்ளது. 1958 முதல் எழுத்துலகில் ஈடுபட்டுவரும் கவிக்கோ, மரபுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல், புதுக்கவிதை என்ற பல்வகை இலக்கியத்துறைகளில் தேர்ச்சிப் பெற்றவராக இருக்கிறார். மரபு கவிதை நூல்கள்; "இளங்கோ கவிதைகள் (1983)', "போர்ட்டிக்சன் மகாமாரியம்மன் புகழாஞ்சலி பூக்கள் (1998)', "கவியரங்கக் கவிதைகளில் கவிமணி (1998)', "மருதி காவியம் (1998)', "முற்றுப் புள்ளிகள் முடிவுகள் அல்ல (2008)', "யாழின் மௌனமொழி (2022)' எனும் ஆறு மரபுக் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய படைப்புகளில் மரபுக்கவிதையை மட்டும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாடுபொருள்

பாடுபொருள் என்பது கவிதையில் கவிஞர் பாடப்படுகின்ற கரு அல்லது பொருளைக் குறிப்பதாகும். சமுதாயம், தமிழர் பண்பாடு, நாட்டுப் பற்று, அரசியல், மொழி, பெண்ணியம், இயற்கை, ஆன்மிகம்/ இறை போன்ற பாடுபொருள்களே, பெருமளவில் கவிஞர் சிமா. இளங்கோவின் கவிதைகளில்

காணமுடிகிறது. "என்று விடியும் இனி', "இன்பத்தில் சிறப்பு', "உழைக்க வேண்டும்', "ஒருமைப்பாட்டுப் பொங்கல்", "மலரின் சிந்தனையில் மனிதன்", "மறந்தாபோனீர்?", "பெரியார்கள் வாழவேண்டும்", "ஒரு குடியனின் உளறல்", "சில சொந்தங்கள்", "சிரிப்பினிசம்" போன்ற ஏராளமான தலைப்பில் சமுதாயப் பாடுபொருளைப் பாடியுள்ளார்.

தமிழர் பண்பாடு அல்லது பண்பாடு என்ற பாடுபொருளில், "கொலைக்காரி", "பழமையின் இனிமை", "வேண்டுகோற் கேண்மினே!", "பொய்யும் மெய்யும்" போன்ற தலைப்புகளில் கவிதை எழுதப்பட்டுள்ளது. மேலும், "நாடு", "சுதந்திரம்", "விழா நகரம் போர்ட்டிக்சன்", "மருதி" ஆகியவை நாட்டுப்பற்று என்ற பாடுபொருளில் அமைந்துள்ளது. "அரசியல்வாதி", "தொண்டன்", "கதிரவனே நீரன்றோ?", "தலைவன்" எனும் கவிதைகள் அரசியல் பாடுபொருளைத் தாங்கியுள்ளது. "தமிழ் வாழ்த்து", "சிரிப்புத் தான் வருகுதைய்யா!" ஆகிய கவிதைகள் மொழி பாடுபொருளில் அமைந்துள்ளது. "போர்ட்டிக்சன் மகாமாரியம்மன் புகழகாஞ்சலி பூக்கள்", "அம்மன் திருவடிக்கு", "பத்துமலையினில் ஏறிப்பாரு..!","ஞானப்பாலூட்டும்தாயே!", "தாய்மூகம்பிகையின் தாள் போற்று" எனும் கவிதைகள் ஆன்மீகத்தையும் இறைபக்தியையும் பறைசாற்றுகின்றது.

## மையக்கரு

மையக்கரு என்பது பாடுபொருளின் வாயிலாகக் கவிஞர் உணர்த்தும் செய்திகள் ஆகும். பாட்டாளி மக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், இரப்பர் தோட்ட வாழ்வு, ஏழையின் குமுறல், நிகழ்காலக் கொடுமைகள், வாழ்வியல் கருத்து, நீதியில் ஊழல், ஏழ்மைக்கு இரக்கப்படுதல், பொய்களைச் சாடுதல், தன்முனைப்புத் தூண்டல், பிறந்த மண்ணின் மீது பற்று, மலேசியாவின் ஆட்சிச் சிறப்பு, நாட்டின் சிறப்பு, கற்பு, விலைமகளின் நிலை, பெண் உரிமைகள், பெண்மையின் தியாகம், தலைவனின் மாண்பு, தொண்டர்களின் சிறப்பு, பொருளாதார விழிப்புணர்வு, "ம. இ. கா', அம்மனின் சிறப்புகள், அம்மனின் புகழ்மாலை, மாரியம்மன் திருவிழா, பத்துமலை முருகன் போன்ற பல்வேறு மையக்கருகளைத் தாங்கி வருகின்றன, கவிக்கோவின் கவிதைகள்.

## கருத்துகள்

தமிழர்களின் பல்வேறு சிறப்புகளையும் பலவீனங்களையும் கவிதைகளில் காணலாம். பாட்டாளி மக்களின் வாழ்வியல் சிக்கல்களையும் இன்னல்களையும் கூறுகின்றது. தமிழர் பண்பாட்டில் உயர்ந்த பொருளான கற்பு மிக உச்சமாகக் காட்டப்பட்டுள்ளது; அது, "கொலைகாரி" என்ற குருங்காவியத்தில் இடம்பெறுகிறது. மேலும், இரப்பர் தோட்டத்தில் தமிழர்களும் தமிழ்ப்பெண்களின் அவல நிலைகளும் உணர்த்தப்பட்டுள்ளது. "மறந்தா போனீர்?" என்ற கவிதை, தோட்டப்புற மக்களின் வாழ்வைக் கூறுகிறது. மலேசியாவின் சிறப்புகளையும் அதனின் சிறந்த ஆட்சி முறைமையும் காண்பிக்கிறது. பிறந்த மண்ணிற்கும் நாட்டிற்கும் விசுவாசத்தோடும் பெருமிதத்தோடும் இருப்பது கடமையாகும். ஒரு தலைவனுக்குத் தொண்டன் சிறப்புச் சேர்க்க வேண்டும். விலைமகளிரிடம் நிலைகண்டு பரிவு காட்ட வேண்டும். நமது வாழ்க்கையில் பொய்கள் மெய்களாகச் சூழ்ந்திருக்கின்றது. வாழ்க்கையில் பொய்களைத் தவிர்த்து அறம்மிக்க வாழ்வுதனை வாழ வேண்டும். வாழ்க்கையில் இறைவனைத் தொழ துயரமற்ற வாழ்க்கையைப் பெறலாம். தமிழருக்கு மொழியுணர்வும் இறையுணர்வும் இருகண்களாக இருக்க வேண்டும். நாட்டில் நடக்கும் தீயச்செயல்களைத் தட்டி கேட்க இளைஞர்களின் கூட்டம் எழ வேண்டும் போன்ற பல தெரிநிலைக் கருத்தும் புதைநிலைக் கருத்தும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

### கவிதை நயம்

கவிதை நயம் என்பது கவிஞர் தனது கவிதைகளில் பயன்படுத்திய பொருள் நயம், ஓசை நயம், சொல் நயம், அணி நயம் குறிப்பதாகும்.

### பொருள் நயம்

கவிஞர் கவிதையை வாசிப்போருக்குக் கூறும் கருத்துகள்தாம் பொருள் நயமாகும். இது தெரிபொருள், புதைபொருள் என இரு வகைப்படும்(பச்சைபாலன், 2013).

### தெரிபொருள்

வெளிப்படையாக அமைந்திருக்கும் கருத்தே, தெரிபொருளாகும்.

**"...கல்லாமை தீது! தீது**
**கலையாமை அதனிற் தீது!**
**இல்லாமைக் கொடுமை யாலே**
**இகத்தினில் ஒருவர் கல்வி..."**
**(இளங்கோ கவிதைகள், 1983)**

"உழைக்க வேண்டும்' எனும் தலைப்பிலான இக்கவிதையில், தமிழர் சமுதாயத்தில் கவிஞருக்கு இருக்கும் எதிர்பார்ப்பினை, நாட்டில் ஏழ்மை குறைந்து அழிய வேண்டும் என்றும், அனைவருக்கும் கல்வியும் இல்லாதவர்க்கும் கல்வியும் வேண்டும் என்றும், காரணம் சொல்லி எந்தவொரு செயலையும் தள்ளிவைக்காமல், அதற்காக உழைத்து நிறைவேற்ற வேண்டும் என நயமாகக் கூறுகிறார் கவிஞர்.

### புதை பொருள்

கவிதையைப் படித்துப்பின் அதில் புதைந்திருக்கும் கருத்துகளை உணருவதே, புதைபொருளாகும் (பச்சைபாலன், 2013).

**"...கொள்ளாமை நிலையேற் பட்டால்**
**கொழுத்திடு இவ்வை யத்தை**
**இல்லாமல் செய்தல்! கல்வி**
**இயலாளர் வேலை யாகும்.."**
**(இளங்கோ கவிதைகள், 1983)**

அன்றைய கல்வி இயலாளராக இருந்த ஒருவருக்கு "கல்வி இல்லாதவர்க்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்" என உரக்கப் பாடி, அவருக்கு எச்சரிக்கை விடுத்து, அவரின் பொறுப்பில்லாமையைத் தள்ளி வைக்கச் சொல்லி, இனிமேலாவது உழைக்க வேண்டும் என நயமாக அறைகூவல் விட்டுள்ளார், கவிக்கோ. இஃது அனைத்தும் கல்வியிலாளர்களுக்கு, ஓர் அறிவுரையாகவும் அவர்களின் கடமையை நினைவுப்படுத்தும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது.

### ஓசை நயம்

கவிதை என்பது ஓசை நயத்தோடு அமைந்திருக்கும். ஓசை நயத்துக்கு ஏற்ப கவிதையில் முன்னும் பின்னும் சொற்களைத் தொடுப்பதால் அது தொடை எனப்படுகிறது (பச்சைபாலன், 2013). ஓசை நயம் என்பதை எதுகை, மோனை, சந்தம், ஆகிய கூறுகளை உள்ளடக்கி உள்ளது ஆகும் (பாமா பெரியசாமி, 2018).

### எதுகை

கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது எது கையாகும் (மலேசியக் கல்வி அமைச்சு, 2021). கவிதையின் ஒவ்வோர் அடியிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருதல் ஆகும் (பாமா பெரியசாமி, 2018).

**"கதிர்வர வாலே கங்குல்**
**கறைதிரை போகும் குன்று**
**நதிவர வாலே செந்நெல்**
**நலம்விளைந் தாடும்! எங்கள்,**
**மதிவளர் டான்ஸ்ரீ சோமா**
**மாண்புரு உழைப்பி னாலே**
**கதியிலா ஏழை வாழ்வில்**
**கனிந்ததே வளங்கள் கோடி!"**
**(முற்றுப் புள்ளிகள் -**
**முடிவுகள் அல்ல!, 2008)**

இக்கவிதையில் அடி எதுகையைக் கவிஞர் பயன்படுத்தியுள்ளார். ஒவ்வொரு அடியிலும் "த" வரிசை சொல்லே இரண்டாம் எழுத்தாகப் பயன்படுத்தி, ஓசை நயத்தோடு கவிதையை அமைத்துள்ளார். இதர கவிதைகளும் இத்தகைய எதுகையோடும் ஓசை நயத்தோடும் கவிஞரால் எழுதப்பட்டுள்ளது.

**மோனை**

கவிதைச் சீர்களில் முதல் எழுத்து, ஓசையால் ஒன்றி வருவதே மோனையாகும் (பாமா பெரியசாமி, 2018). இந்தக் கூறில் இரண்டு வகை உள்ளது. அவை, சீர்மோனையும் அடிமோனையும் ஆகும். சீர்மோனை என்பது கவிதையில் ஒவ்வொரு சீரிலும் முதல் எழுத்து ஒரே இனமாக இருப்பது ஆகும். அடிமோனை என்பது கவிதையில் அடிதோறும் முதல் எழுத்து ஒரே இனமாக இருப்பது ஆகும் (பரந்தாமனர், 2016).

***"இந்நாடு நின்நாடு! இஃதின் மேன்மை***
***இருகண்போல் நீநாடு! நின்னை ஈன்றச்***
***சொந்தத்தாய் நாடென்றே விரிந்த வானில்***
***சுழன்றிடும் சிட்டாக ஆடிப் பாடு;***
***வந்தாடும் வளங்கொல்லும் வறுமை என்னும்***
***வறண்டப்பேய் ஆட்டத்தை ஏர்ச வுக்கால்***
***பந்தாடு! பிணியோடு நாடு வோர்க்குப்***
***பணிசெய்ய உறவென்று முந்தி யோடு!"***
***(இளங்கோ கவிதைகள், 1983)***

மேற்காணும் கவிதையில் கவிஞர் அனைத்து அடிகளுக்கும் அடி மோனை அமைத்துள்ளார். அனைத்தும் ஓரினமாக அமைந்திருக்கிறது. மேலும், முதல் வரியிலும் ஐந்தாம் வரியிலும் சீர் மோனை இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. இதனால், இக்கவிதையின் ஓசை நயம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இதேபோன்று, மற்ற கவிதைகளும் இத்தகைய மோனை பெற்று நயமாக இருக்கிறது.

**சந்தம்**

கவிதையின் சீர்கள் ஓசையால் ஒன்றிவருவது சந்தம் ஆகும்.

***எங்கும் ஒளியினை ஏற்றி- மக்கள்***
***ஏழ்மை நிலையினை மாற்றி!***
***பொங்கும் உணர்வினை போற்றி- கொடும்***
***புல்லர் செயலினை தூற்றி!***
***துன்பச் சுமையினைப் போக்கி - வாழ்வில்***
***துள்ளும் சுகத்தினைத் தேக்கி***
***இன்பத் தடைதனை நீக்கி- உலகில்***
***எல்லாம் சமமென ஆக்கி!***
***(இளங்கோ கவிதைகள், 1983)***

கவிதைகளின் ஒவ்வோர் அடியில் சீர்களின் ஓசை ஒன்றி வருவதால் இக்கவிதைகள் சிறந்த ஓசை நயத்தோடு விளங்குகிறது. இதுபோன்ற பல கவிதைகள் கவிஞரால் இயற்றப்படுள்ளது.

**சொல் நயம்**

கவிதையின் பாடுபொருளுக்கும் பாடு களத்திற்கும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவதையே, சொல் நயம் எனப்படுகிறது (பச்சைபாலன், 2013). இது கவிதையில் கையாளப்பட்டுள்ள நுட்பமான பொருளை உணர்த்தும் சொற்களைக் குறிக்கும். மேலும், இது கவிஞரின் சொல்புலமையை எடுத்துக்கூறும். சான்றாக,

| சொல் | கவிதைத் தலைப்பு | கவிதை நூல் |
|---|---|---|
| குலம்வளர் இசைவீந்த | கொலைகாரி | |
| வேம்புநிகர், கொடுந்நாளாய் | மணவிழாக் கவியரங்கம் | |
| காய்ச்சொல் பகராமை | உழைக்க வேண்டும் | இளங்கோ கவிதைகள் |
| மேல்நாட்டார், நற்றலைவன், பூவையர் கூந்தல், செக்கின் எள்ளாய் | நாடு | |
| நாற்ற மேவும், பாழ்படு நரகம் | மலரின் சிந்தனையில் மனிதன் | |
| வாதாட்டம், தோடுடையோன், கானாடும், மந்தி, நடனக் கோவே, தலைகங்கை | நீர் ஆடும் வேளையிலே நீராடுமோ? | முற்றுப் புள்ளிகள்- முடிவுகள் அல்ல |
| கங்குல் கறை, செந்நெல் நலம் விளைந்தாடும், கழறுஞ்சொல் | கோடியாண்டு புகழ்சேர் வாழி! | |
| ஐந்நெறிசூழ் மக்களாட்சி, தணல்வீழ்ந்த புழு, இனத்தாலே நான்ஏழை, வல்வினையால் மருவுற்றேன் | மருதி காவியம் | |

இவை போன்ற பல சொற்களைத் தனது கவிதைகளில் நயம்மிக்கக் கையாண்டுள்ளார்.

**அணி நயம்**

அணி என்றால் அணிகலன், அலங்காரம், அழகு, கூட்டம், ஒழுங்கு என்று பொருள்படும் (பச்சைபாலன், 2013). கவிதையை அழகுபடுத்தவும் சுவைபடக் கூறவும் கவிஞர் பயன்படுத்துவதே, அணியாகும்.

**உவமை அணி**

முதலில் உவமையும் அடுத்து உவமைப்படு பொருளும் வருவது உவமை அணியாகும். சான்று,

**"..எழுகதிர் கடுமை கொஞ்சம் எழுகின்ற கதிர்**
**இதயத்துள் இரக்க மில்லான்...**
**...சீரறிந்து தமிழாலே; உவமை யாலே!**
**தேன்மழையைப் பொழிந்திட்ட புலவர் கோவே... தேன் போன்ற மழை**
**...அமிழ்து மொழியைக் காப்பதுவே - என் அமிழ்தம் போன்ற மொழி**
**ஆரம்ப வேலை எனக்கூறி..."**

போன்ற பல உவமை அணிகளால் கவிஞர் கவிதைகளுக்கு அழகு சேர்த்துள்ளார்.

**உருவக அணி**

முதலில் உவமைப்படுபொருளும் அடுத்து உவமையும் வருவது உருவகமாகும். சான்று,

**"...அருளொடு பொருளும் தந்து**
**அணைப்பதில் தாய்மைப் பாணி!..."**

இங்கு முருகனைத் தாயாகக் கவிஞர் உருவகப்படுத்தியுள்ளார்.

**"...பாய்ந்து ஓடும் போது - அதன்**
**பாம்பு போன்ற வாலே..."**

மேற்காணும் கவிதையில், கன்றின் வாலைப் பாம்பாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று பல உருவக அணிகள் கவிஞரால் கவிதையில் கோர்க்கப்பட்டுள்ளது.

**பின்வருநிலை அணி**

ஒரு கவிதையில் முன்னர் வந்த சொல்லே திரும்பவரினும் அல்லது முன்னர் வந்த பொருளே பின்னர்த் திரும்ப வரினும், அது பின்வருநிலை அணியாகும். சான்று,

**"எண்ணாமை வேண்டும்! தீமை**
**இழைக்காமை வேண்டும்! இன்னா**

***பண்ணாமை வேண்டும்! காய்ச்சொல்***
***பகராமை வேண்டும்! ஏழை..."***
***(இளங்கோ கவிதைகள், 1983)***

"வேண்டும்' என்ற சொல்லைக் கவிதையில் கவிஞர் திரும்பத் திரும்பப் பயன்படுத்தியுள்ளார். ஆதலால், இவர் கவிதையில் இவ்வகை அணியும் இருக்கிறது.

### திரிபு அணி

சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்றி வருவது, திரிபு அணியாகும். சான்று,

***"கண்ணுக்(கு) இமைகாப்பு! கண்ணில் லாது***
***கபோதிக்குக் கைக்கோலே காப்பு! பெற்ற***
***மண்ணுக்(கு) எதுகாப்பு? உயிர்சேர் மானம்!***
***மாட்டுக்கும் கொம்புண்டு பாது காப்பு***
***விண்ணுக்கு மழைமேகம் காப்பை போல***
***வீரந்தோய் தமிழே!என் தாயே! சேயின்***
***பண்ணுக்கு நீபாது காப்பு தந்தே***
***பாலன்பால் கருணைசெய்! வணங்கு கின்றேன்!"***

மேலே கோடிட்ட அனைத்துச்சீர்களிலும் முதலெழுத்து மட்டும் "க", "ம", "வி", "ப" என்று வேறாக, மற்ற எழுத்தெல்லாம் ஒன்றாகக் கவிதையில் வந்துள்ளது. கவிஞரின் பெரும்பாலும் கவிதைகளில் இவ்வகை அணி காணப்படுகிறது.

### தற்குறிப்பேற்ற அணி

கவிஞர், அஃறிணைப் பொருளை உயர்திணையாகக் கூறும் அணியாகும். சான்று,

***"...நரியர்கள் அனைத்துப் பேரும்***
***நாயெனக்குழைந்து நிற்பர்..."***
***(மருதி, 1998)***

மனிதர்களின் தந்திரப் புத்தியை "நரியுடனும்", தனக்கான வேலை முடிய எப்படியும் அலைவதை "நாயுடனும்" என ஏற்றிப் பாடியுள்ளார், கவிஞர்.

### தன்மை நவிற்சி அணி

ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபடக் கூறுவது, இவ்வணியின் சிறப்பாகும். சான்று,

***"அம்மன் திருவடியை அண்டிப் பணிவோர்க்(கு)***
***இம்மண் தனில்துன்பம் ஏதையா? - ..."***
***(இளங்கோ கவிதைகள், 1983)***

இறைவனிடம் சரணடைந்தால் இந்த மனித வாழ்க்கையில் துன்பம் இல்லையென்று, அப்படியே இயல்பாகக் கூறியுள்ளார், கவிஞர்.

### முரண் அணி

முரணான இரு பொருள்களுக்கிடையில் ஒருமைப்பாடு கற்பித்துக் கூறுவது, முரண் அணியாகும். சான்று,

**...புயலாக மாறாமல் இளந்தென்றல் போல**
**பொறுப்போடும் விருப்போடும் செய்கின்ற நல்ல...**

மேற்காணும் அடியில், புயல் என்ற பூதாகரமான காற்றையும் தென்றல் என்ற இதமான காற்றையும் தனது கருத்தினைக் கூற முரணாகக் கவிதையில் பயன்படுத்தியுள்ளார், கவிஞர்.

### படிப்பினை

தமிழர் சமுதாயம் ஏற்றம் காண அனைத்துத் தரப்பினரும் ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் செயல்பட வேண்டும். அதிலும், தலைமைத்துவம் தாங்கும் தலைவர்கள் பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் செயல்பட்டுத் தமிழர் வாழ்க்கையில் முன்னேற்றங்காணச் செய்யவேண்டும். தலைவர்க்கான பதவி போட்டியிட மட்டுமில்லாமல் மக்களுக்குச் சேவை செய்யும் உணர்வை வளர்க்க வேண்டும். ஏழ்மைக் கோட்டில் தவிக்கும் மக்களுக்குக் கல்வி மிகமுக்கியம். கல்வி அறிவை வளர்ப்பதோடு, ஒரு தலைச்சிறந்த

சமுதாயத்தையே உருவாக்கும். பெண்களுக்குப் பாதுக்காப்பான சூழலையும் தரமான கல்வி, வேலை போன்ற தேவைகளையும் நிறைவேற்றித் தருவது ஒவ்வொருவரின் கடமையாகும். விலைமகளிரின் உணர்வுக்கும் மனத்திற்கும் செவிசாய்க்க வேண்டும். நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய அடிப்படை பண்பாகும். நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஒற்றுமையுடன் மூவீனமாகச் சேர்ந்து பாடுபடவேண்டும். பிறந்த இடத்திற்குப் பெருமை சேர்ப்பதோடு, மறவாமலும் இருக்க வேண்டும். மனித வாழ்க்கையில் இறை நம்பிக்கை அவசியமாகும். இறைபத்தி இருந்தால் வாழ்க்கையில் பல உயரங்களை அடையாளம். பெற்றோரிடம் பிள்ளைகள் அன்போடும் பரிவோடும் இருத்தல் அவசியம். “எயிட்ஸ்” போன்ற நோயில் சிக்கமால், குறையாத நலத்தோடு வாழ வேண்டும். ஆண் சமுதாயம் கட்டிய மனைவிக்குத் துரோகம் இளைக்காமல், அவர்களை மதித்து வாழ வேண்டும். இது போன்ற பல படிப்பினைகளைக் கவிஞரின் கவிதைகள் தாங்கி மலர்ந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்

1. இளங்கோ, சிமா. 1983. *இளங்கோ கவிதைகள்.* சிரம்பான், மலேசியா: சரிக்காட் இளவேணி.
2. இளங்கோ, சிமா. 2008. *முற்றுப் புள்ளிகள் - முடிவுகள் அல்ல!.* நெகிரி செம்பிலான், மலேசியா: சுவடிப் பதிப்பகம்.
3. இளங்கோ, சிமா. 1998. *மருதி காவியம் - புவியரங்கம் போற்றும் கவியரங்கம்.* கோலாலம்பூர், மலேசியா: பூரணா எண்டர்பிரைஸ்.
4. சாமிக்கண்ணு ஜெபமணி, ஈசாக்கு சாமுவேல் இராஜேந்திரன், முனியாண்டி. 2020. *மலேசிய மண்ணில் தமிழ்க் கவிதை வளர்ச்சி.* சென்னை: சக்தி பதிப்பகம்.
5. பாமா, பெரியசாமி. 2018. *கவிதை கற்பித்தலை எளிமைப்படுத்தும் தமிழ்த் திரை இசைப் பாடல்கள்.* மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 2(4),302-314.
6. பச்சைபாலன், ந. (2013). *தேர்வுக்களம்.* மலேசியா: ஸ்ரீ மாஜூ அச்சகம்.